## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(09.10.2021 முதல் 13.10.2021)

**அறிக்கை எண்: 81/2021** **தேதி 08.10.2021**

### பெரம்பலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 30 °செ முதல் 33 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 °செ முதல் 25 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### பெரம்பலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (09.10.2021 முதல் 13.10.2021)

| கடந்த வார வானிலை (05.10.2021 முதல் 07.10.2021) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (09.10.2021 முதல் 13.10.2021) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 05/10 | நாள்-2 06/10 | நாள்-3 07/10 | தேதி | நாள்-1 09/10 | நாள்-2 10/10 | நாள்-3 11/10 | நாள்-4 12/10 | நாள்-5 13/10 |
| 1.9 | 12.4 | 0.3 | மழை (மி.மீ.) | 10 | 8 | 10 | 10 | 8 |
| 33 | 30 | 33 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 33 | 33 | 32 | 32 | 32 |
| 25 | 24 | 24 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 25 | 24 | 24 | 24 | 24 |
| 8 | 5 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 80-77 | 81-70 | 90-57 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 95-50 | 95-50 | 95-50 | 95-50 | 95-50 |
| 8 | 9 | 4 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 10 | 12 | 12 | 12 |
| வட கிழக்கு | தெற்கு | கிழக்கு தென் கிழக்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு |

### பெரம்பலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 09.10.2021 முதல் 13.10.2021 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32 °செ முதல் 33 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 °செ முதல் 25 °செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 95 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10-12 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் மேற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| | | காவேரி டெல்டா பகுதிகளில் வரும் நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்பதால் விவசாயிகள் தங்கள் வயல்களில் உள்ள பயிர்களுக்கு முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும். |

| | | |
|---|---|---|
| பருத்தி | | தற்போது நிலவும் தட்பவெப்பநிலையின் காரணமாக இளம் பருத்தியில் பச்சை தத்துப்பூச்சியின் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த தயோமித்தாக்சின் 25 WG 0.6 கிராம்/லிட்டர் அல்லது இமிடாகுளோபரிட் 17.8 SL 0.6 கிராம்/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும் |
| நெல் | நடவு வயல் | தற்போது நிலவும் வானிலையின் காரனமாக நடவு வயலில் இலைபேன் தாக்குதல் ஆங்காங்கே தென்படுவதால் இதனை கட்டுப்படுத்த தையாமீத்தாக்சைம் 25 WG நனையும் தூள் 40 கிராம் ஏக்கர் என்ற அளவில் பயன்படுத்தவும் |
| கால்நடைகளுக்கு | மாடு | மழை பருவம் தொடங்க உள்ளதால் ஆடுகளுக்கு நீல நாக்கு நோய் தாக்காமல் இருக்க கொட்டகைகளில் கொசுக்களை விரட்ட நொச்சி இலை புகை மூட்டம் போடவும். |

## குறுஞ்செய்தி

காவேரி டெல்டா பகுதிகளில் வரும் நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்பதால் விவசாயிகள் தங்கள் வயல்களில் உள்ள பயிர்களுக்கு முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்.

**இயக்குநர்**